1990 ஏப்ரல் 19] [திரு. கே. பி. கந்தசாமி]

கட்டி நிலத்தை எடுத்துக்கொள்ள முன்வர வேண்டும். இன்னொரு நிபந்தனை அந்த கோயிலுக்கு வேறு நிலம் இருக்க வேண்டும். ஒரு கோயிலுக்கு இருக்கக்கூடிய அத்தனை நிலங்களையும் விற்று விட அறநிலையத் துறை தயாராக இல்லை. ஆகவே, முழுத் தொகையைக் கொடுக்க முன்வந்தால் நாங்கள் அதை மாற்றித்தர தயாராக இருக்கிறோம்.

திரு. வி. கே. சின்னசாமி : தலைவர் அவர்களே, அவர்களுக்கே அந்த இடத்தை மார்க்கெட் விலை கொடுத்தால் கொடுப்பதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லி இருக்கிறார்கள். தமிழகத்தில் இருக்கிற அரிசின, ஆதிதிராவிட மக்களுக்குக் கூட கோயில் நிலங்களை ஆர்ஜிதம் செய்ய தடை இருப்பதாக அறிகிறேன். அப்படி ஒரு தடை இருப்பதால் பல இடங்களில் இன்றைக்கு நிலத்தை ஆர்ஜிதம் செய்ய முடியாத நிலை ஏற்பட்டிருக்கிறது. இதற்கு அமைச்சர் அவர்கள் சொல்வது பொருந்துமா ? அல்லது தமிழகத்தில் இருக்கிற அனைத்துக் கோயில்களுக்கும் தடை நீக்கம் செய்யப்பட்டு, கிராமப் புறங்களில் வாழ்கிற ஏழை எளியவர்களுக்கு அந்த இடங்களை ஆர்ஜிதம் செய்து, வீட்டுமனைப் பட்டா கொடுக்க உத்தரவு பிறப்பிக்க அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

10-05 மணி.

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : தலைவர் அவர்களே அப்படிப்பட்ட ஒரு தடை உத்தரவு இருப்பதாக எனக்குத் தெரியவில்லை. ஆனால் தமிழ்நாடு முழுவதிலும் வீடு இல்லாதவர்களுக்கு வீட்டு நிலம் கொடுப்பதற்கு புறம்போக்கு நிலங்கள் ஏராளமாக இருக்கின்றன. எங்கே புறம்போக்கு நிலம் இல்லையோ, அங்கே அவசியப்பட்டால் கோவில் நிலத்தைக் கவனிக்கலாம் என்பதுதான் இன்றையத் திட்டம்.

(ஆ) திருமங்கலம் ஒன்றியக் கண்மாய்களிலுள்ள கருபுல மரங்களிலிருந்து ''கருப்பு ரோமப் புழு'' தோன்றியுள்ளது குறித்து.

திரு. இரா. சாமிநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''திருமங்கலம் ஒன்றியத்தில் பல கண்மாய்களின் உள்பகுதியிலுள்ள கருபுல மரங்களிலிருந்து கருப்பு ரோமப்புழு தோன்றியுள்ளது குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம் : பேரவைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன் :

[திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம்] [1990 ஏப்ரல் 19

அறிக்கை.

கருமைநிற கம்பளிப்புழு திருமங்கலம் உட்கோட்டத்தில் தோன்றி உள்ளது. இப்புழு கண்மாயிலுள்ள கருவேல மர இலை களையே உணவாக உட்கொள்வது வழக்கம். தற்போது உள்ள சாதகமான சீதோஷ்ணநிலை காரணமாக இப்புழு பெரு மளவில் பெருகி அருகிலுள்ள வயல்களுக்கு வர ஆரம்பித்தது. இந்த கருமைநிற கம்பளிப்புழு இதுவரை சுமார் 5 எக்டேர் பரப்பிலுள்ள நிலக்கடலை மற்றும் எள் பயிர் பயிரிடப்பட்டுள்ள நிலங்களில் புகுந்துள்ளது. இப்புழு எள் பயிரை அதிக அளவில் விரும்பி உண்கிறது. பயிரிடப்பட்டுள்ள பரப்பில் தோன்றி உள்ள இப்புழுவை கட்டுப்படுத்த உடன் பூச்சி மருந்துகள் தெளிக்கப் பட்டது. மேலும் 5–4–1990 அன்று பெய்த பெரு மழையினால் கண்மாயில் சிறிதளவு நீர் தேங்கி உள்ளதால் இப்புழுக்கள் கரு வேல மரங்களிலிருந்து வெளிவருவது தடைப்பட்டுள்ளது. மேலும் இனிமேலும் அம்மரங்களிலிருந்து வெளிவர வாய்ப்பில்லை. மேலும் மக்கள் வாழும் பகுதிகளுக்குச் சென்றுள்ள இப்புழுக் களை கட்டுப்படுத்த உடன் பூச்சிமருந்து தெளிக்குமாறு மாவட்ட சுகாதார அலுவலர் அவர்கள் கோரப்பட்டுள்ளார்கள்.

திரு. இரா. சாமிநாதன் : பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள், தன் னுடைய அறிக்கையில் ரோமப்புழு உண்டாகியுள்ள கண்மாயின் உள்பகுதியில் மழைத் தண்ணீர் இருப்பதால், ரோமக் கருப்புப் புழுக்கள் உருவாகாது என்று கூறியிருப்பது சரியல்ல. கருவேல மரங்கள் உள்ள கண்மாய்ப் பகுதியில் Balaches Hairy catapillar என்று சொல்லக்கூடிய கருப்பு ரோமப் புழுக் கள் மாசிவ்வாக, அதாவது கூட்டம் கூட்டமாக கடலை, எள், ஆமணக்கு போன்ற வேளாண்மைப் பயிர்களைப் பாதிக்கின்ற அபாயமும், உடம்பில் பட்டால் அரிப்பு ஏற்பட்டு தோல் தடிப்பாகின்ற நிலையும் இருப்பதால், போர்க்கால அடிப் படையில் நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் புழு ஏற்பட்டது உண்மை. ஆனால் இப்போது அந்தப் புழு கட்டுப்படுத்தப்பட்டு இருக்கிறது என்று தான் துறையிலேயிருந்து தகவல் வந்திருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அது உண்மையில்லை என்று சொல்கிறார்கள். ஆகவே அதைக் கருத்திலே கொண்டு, உடனடியாக துறையோடு தொடர்பு கொண்டு நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. இரா. சாமிநாதன் : தலைவர் அவர்களே, பாதிக்கப் பட்ட விவசாயிகளுக்கு நஷ்டஈடு வழங்க அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம் : தலைவர் அவர்களே, உத்தேசம் இல்லை.